**DEPOSITION OF WITNESS**

**In the Court of THE SESSIONS JUDGE, ADDITIONAL DISTRICT COURT, VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.**

**CASE NO. MCOP No: 118/2021**

**Petitioner side Witness – 2**

**Dated : 21.01.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ராதாசங்கர் | **Caste** | : | -- |
| **Father's Name** | : | | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989)

**முதல் விசாரணை**

நான் ஸ்ரீவில்லிபுத்தூர் ராஜீவ் காந்தி நகரில் குடியிருந்து வருகிறேன் . வியாபாரம் செய்து வருகிறேன். பென்டிங்டன் கமிட்டியின் செயலாளராகவும் இருந்து வருகிறேன். **அதற்கான ஆவணம் ம .சா.ஆ.15.** நீதிமன்ற அழைப்பாணையின்பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். பென்டிங்டன் மார்கெட் கமிட்டியில் அய்யனார் என்பவர் கடை நம்பர். N. 9 ல் காய்கறி கடை வைத்து வியாபாரம் செய்து வந்தார் . அவர் 2020 ம் வருடம் விபத்தில் இறந்துவிட்டார். நம்பர். N. 9 ல் கடையை 1995 லிருந்து 2020 வரை அந்த கடையில் வாடகைக்கு இருந்து காய்கறி வியாபாரம் செய்து வந்தார் . இறுதியாக மாத வாடகையாக 725 ரூபாய் செலுத்தி வந்தார் . என்னிடம் காட்டப்படும் இரசீதுகள் அவர் கடை வாடகை செலுத்தியதற்கான இரசீதுகள். அவை ம.சா.ஆ.14 வரிசை(8 இரசீதுகள்) ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் செயலாளர் என்பதை காட்டுவதற்கு தீர்மான நகல் எதுவும் தாக்கல் செய்யவில்லை. அய்யனாருக்கு வாடகைக்கு கடை கொடுத்ததற்கு தீர்மானமோ , அல்லது அவர் கொடுத்த விண்ணப்பமோ நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நாங்கள் போட்ட தீர்மானமோ அல்லது அவர் கொடுத்த விண்ணப்பத்தையோ தாக்கல்செய்தால் தான் உண்மையிலேயே நாங்கள் அந்த கடையை அவருக்கு வாடகைக்கு கொடுத்திருந்தோமா இல்லையா என்பது தெரியவரும் என்றால் சரியல்ல . அவருக்கு நாங்கள் கடை எதுவும் வாடகைக்கு விடவில்லை என்றும் , அவர்

இறந்துவிட்டார் என்பதால் இழப்பீடு பெறுவதற்காக அவருக்கு ஆதரவாகபொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

(1ம் எதிர்மனுதாரர் தரப்பில் மேற்சொன்ன குறுக்கு விசாரணையை தங்கள் தரப்பில் ஏற்றுக்கொண்டதாக தெரிவிக்கப்பட்டது)

சாட்சியின் கையொப்பம்

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு . தட்டச்சு செய்யப்பட்டு , சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப் பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.